# 5

# இயேசுவின் முன்னோடி

## (3:1-12)

*கிறிஸ்துவின் வருகைக்கான தயாரிப்பு பற்றிய தலைப்பை, யூதேயாவின் வனாந்தரத்தில் யோவான் ஸ்நானன் பிரசங்கத்தில் பற்றிய குறிப்பை ஏற்படுத்துவதைக் கொண்டு மத்தேயு தொடங்கினார். மல்கியாவின் காலத்தில் இருந்து சுமார் நானூறு ஆண்டுகளாக இருந்த தீர்க்கதரிசன அமைதியை, யோவானின் ஊழியம் முறித்தது.[1] மத்தேயுவின் யூத வாசகர்கள், யோவானை ஏற்கனவே நன்கு அறிந்தவர்களாக இருந்ததாக அவர் யூகித்தார், எனவே அவர் இந்தத் தீர்க்கதரிசியின் பின்னணியைப் பற்றிய தகவல்களை உள்ளடக்கவில்லை. யூதர்கள் யோவானை நன்கு அறிந்திருந்தனர் என்ற உண்மை, சுவிசேஷப் புத்தகங்களில் நிலைநாட்டப் பட்டுள்ளது மற்றும் யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்களாலும் இது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.[2]*

*யோவானின் தொடக்ககால வாழ்வு பற்றி, மற்ற எந்த சுவிசேஷ விபரங்களைக் காட்டிலும் அதிகமான தகவல்களை, லூக்கா சுவிசேஷம் அளிக்கிறது. யோவானின் தந்தை, சகரியா என்ற பெயர் கொண்ட ஆசாரியராக இருந்தார், இவர் அபியாவின் எட்டாவது வகுப்பில் இருந்தார் (லூக்கா 1:5). தாவீது அரசர், ஆசாரியத்துவத்தை இருபத்தி நான்கு வகுப்புகளாக ஒழுங்கு படுத்தி இருந்தார் (1 நாளாகமம் 24). இந்த ஒவ்வொரு வகுப்பும், ஆண்டில் இரு வாரங்கள் தேவாலயத்தில் ஊழியம் செய்தனர். எஞ்சியிருந்த மற்ற நான்கு வாரங்கள், யூதர்களின் முதன்மைப் பண்டிகை நாட்களாக இருந்தன. இவற்றில் (எல்லாரும் இல்லை என்றாலும்) பெரும்பான்மையான ஆசாரியர்கள் பங்கேற்றனர்.*

*சகரியாவின் மனைவியாகிய எலிசபெத்து, பிள்ளை பெறக் கூடிய வயதைத் தாண்டிச்செல்லும் வரையிலும் மலடியாக இருந்தாள் (லூக்கா 1:7, 18). அவள், இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு உறவினராக ஒருவேளை ஒன்றுவிட்ட சகோதரியாக (KJV) இருந்தாள் (லூக்கா 1:36). தேவாலயத்தில் சகரியா தமது ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது, அவரிடத்தில் காபிரியேல் தூதர் தோன்றி, அவருக்கு எலிசபெத்து ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவருக்கு "யோவான்" என்று பெயரிட வேண்டும் என்பதாகக் கூறினார். சகரியா தமக்குக் கூறப்பட்டது பற்றி அவநம்பிக்கையை வெளிப்படுத்தியபோது, அவர் ஊமை யாக்கப்பட்டார் மற்றும் அந்த மகன் பிறக்கும் வரையிலும் அவர் வாய்பேச இயலாதவராக இருந்தார் (லூக்கா 1:11-22, 59-64).*

*யோவான் தேவனுக்கு விசேஷித்த ஒரு ஊழியக்காரராக இருப்பார் மற்றும் அவர், தமது தாயின் வயிற்றில் இருக்கும்போதே, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவார் என்று, தூதரால் சகரியாவுக்குத் தகவல் தரப்பட்டது. அவர் இஸ்ரவேல் புத்திரர்கள் பலரைத் தங்கள் தேவனிடத்திற்குத் திருப்புவார்*

*(லூக்கா 1:15, 16). நசரேய விரதத்திற்கு உரிய பிற நிபந்தனைகள் குறிப்பிடப் படாதிருந்தாலும், யோவான் திராட்சரசம் மற்றும் பலமான பிற குடிவகைகளில் இருந்து விலகி இருந்ததால், அவர் ஒரு நசரேய விரதக்காரராக இருந்தார் என்று பலர் யூகிக்கின்றனர் (லூக்கா 1:15; காண்க எண்ணாகமம் 6). யோவான் "எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்" என்றும் தூதர் கூறியிருந்தார் (லூக்கா 1:17). "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே" "எலியா தீர்க்கதரிசி வருவார்" என்று மல்கியா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (மல்கியா 4:5). யோவானின் பிறப்பிற்குப் பின்னர், அவர் "கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய்" என்று சகரியா தீர்க்கதரிசனம் உரைத்தார் (லூக்கா 1:76). அவரது கூற்று, மல்கியா 3:1ல் உள்ள கூற்றிற்கு மிகவும் நெருக்கமானதாக உள்ளது. "உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் முன்னே நடப்பான்" என்று தூதர் கூறியிருந்தார் (லூக்கா 1:17). வரவிருந்த எலியாவாக இருந்தவர் யோவான் ஸ்நானன் தான் என்று பிற்பாடு இயேசு கூறினார் (11:10, 14; 17:11-13).*

## *ஆயத்தப்படுத்தும் செய்தி (3:1-4)*

***[1]அந்நாட்களில் யோவான் ஸ்நானன் யூதேயாவின், வனாந்தரத்தில் வந்து,***
***[2]"மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்***
***பண்ணினான்." [3]கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்,***

***அவருக்கு பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று,***
***"வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா***
***தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே!"***

***[4]இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது.***

***வசனம் 1. அந்நாட்களில்*** *என்ற சொற்றொடர், இயேசுவின் பிறப்பு பற்றிய எடுத்துரைப்பை (அதிகாரங்கள் 1; 2) இயேசுவின் ஊழியத்திற்குத் தயாரிப்புப் பணிகளுடன் (அதிகாரம் 3) இணைக்கிறது. இதைச் சிலர், கிறிஸ்தவ யூகத்தின் தொடக்கத்தைக் குறிப்பதாக விளக்கப் படுத்தி இருந்தாலும், இது, இயேசு நாசரேத்தூரில் வாழ்ந்த காலம் பற்றிய பொதுவான குறிப்பாக உள்ளது (2:23). ஏரோது இறந்து (கி.மு. 4ல் இருந்து) சுமார் முப்பது ஆண்டு காலம் கடந்திருந்தது, மற்றும் இயேசுவின் வீட்டார் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பி வந்து, நாசரேத்தூரில் குடியமர்ந்தனர் (2:23).* ***யோவானுடைய*** *ஊழியத்தின் தொடக்கத்தை, லூக்கா 3:1, "திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே" (கி.பி. 28) என்று குறிப்பாகக் கால வரையறை இடுகிறது. இயேசு "ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரான" போது, தமது ஊழியத்தைத் தொடங்கினார் (லூக்கா 3:23), மற்றும் இயேசுவைக் காட்டிலும் யோவான் ஆறுமாதங்கள் மூத்தவராக இருந்தார் (லூக்கா 1:36, 56, 57).*

ஆகையால், யோவான் தமது ஊழியத்தைத் தொடங்கியபோது, அவர் சுமார் முப்பது வயதானவராக இருந்தார்.

சுவிசேஷ எழுத்தாளர்கள், யோவான் அல்லது இயேசு வளர்ந்த காலத்தின் ஆண்டுகளைப் பற்றி அதிகமாக எதுவும் கூறவில்லை (காண்க லூக்கா 1:80; 2:40-52). இயேசுவின் ஊழியம், அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்களில் அது உச்சநிலை அடைதல் ஆகியவற்றின்மீதே, சுவிசேஷங்கள் வலியுறுத்தம் செய்தன என்பதே இதற்குக் காரணமாக உள்ளது. முதல் நூற்றாண்டிற்குப் பின்பு, இயேசுவின் பிள்ளைப்பிராயம் பற்றி மனம்போன போக்கில் புராணங்கள் எழும்பி வளர்ந்தன. ராபர்ட் H. மவுன்ஸ் அவர்கள், "அதிர்ஷ்டவசமாக, புனிதவிதிப் படுத்தப்பட்ட சுவிசேஷங்களில், பரபரப்பூட்டும் இப்படிப்பட்ட ஒப்பனைக் கதைகள் உள்ளடங்கவில்லை. இயேசு, மற்ற எந்த யூதப்பையனையும் போன்றே வளர்ந்தார் என்பதில் சந்தேகம் இல்லை என்று எழுதினார்."[3]

இன்றை நாட்களில் சிலர், சவக்கடல் தோல் சுருள்கள் கண்டெடுக்கப்பட்ட இடமான, கும்ரான்கள் என்ற பிரிவினர் வாழ்ந்த இடத்தில், அவர்கள் மத்தியில் யோவான் ஸ்நானன் வாழ்ந்திருந்தார் என்று யூகிக்கின்றனர். அவரது வயதான பெற்றோர் (லூக்கா 1:7) இறந்துபோயினர், வாலிபனாக இருந்தபோதே அந்தப் பிரிவில் இணைந்துகொண்டார் என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதன் விளைவாக, அவரது கண்ணோக்கக் கருத்துக்கள், எஸ்ஸென்ஸ் என்ற பிரிவினரின் போதனையினால் வடிவமைக்கப் பட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட கோட்பாடு, உண்மைபோலத் தோன்றினாலும், இது நிரூபிக்கப்பட இயலாததாக உள்ளது. யோவானைப் பற்றி, "அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" என்று மாத்திரமே வேதவசனம் கூறுகிறது (லுக்கா 1:80). மேலும், பரலோகத்தில் இருந்து வந்த செய்தியைக் கொண்டிருந்த தீர்க்கதரிசியாக அவர் இருந்தார்: "... சகரியாவின் குமாரனாகிய யோவானுக்குத் தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று" (லூக்கா 3:2).

யோவான், தாம் செய்த செயலின் **காரணமாக மாத்திரம்**, "ஸ்நானன்" அல்லது "ஞானஸ்நானம் கொடுப்பவர்" (*baptistēs*) என்று அழைக்கப்பட்டார்: மக்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுத்தார் (3:6ன் மீதான விளக்கங்களைக் காணவும்). மத்தேயு சுவிசேஷத்தின்படி அவர், **யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து பிரசங்கம் பண்ணினான்.** "பிரசங்கம் பண்ணினார்" என்ற வார்த்தை, "(பறைசாற்றுபவர் என்ற வகையில்) அறிவிப்பவர்" என்று அர்த்தப்படுகிற (*kērussō* என்ற) வார்த்தையில் இருந்து வந்துள்ளது. "பறைசாற்றுபவர்" என்பவர் பொது அறிவிப்புகளை ஏற்படுத்தியவராக இருந்தார். "வனாந்தரம்" (*erēmos*) என்ற வார்த்தை, குடியிருப்பும் விவசாயப் பணிகளும் இல்லாத இடத்தைப் பொதுவாகக் குறிப்பிடுகிறது. எருசலேமுக்கும் சவக்கடலுக்கும் இடையில் கொஞ்சமே மக்கள் வாழ்ந்து வந்த பகுதியும், இன்றைய நாட்களில் பாறை நிலமாகவும் கைவிடப்பட்ட இடமாகவும் உள்ள பகுதியைக் குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தையை மத்தேயு பயன்படுத்தினார். ஜேக் P. லூயிஸ் அவர்கள் இப்பகுதியைப் பற்றிப் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> மத்திய பீடபூமியில் இருந்து சவக்கடல் நோக்கிச் சரிந்து சென்ற, யூதேயாவின்

> வனாந்தரம், தண்ணீர் குறைவுபட்ட பகுதியாக உள்ளது, ஏனெனில் மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து வரும் மேகங்கள், மலை முகட்டின் மேற்குப்பகுதியில் தங்கள் ஈரத்தைச் சொட்டிவிடும். செங்குத்தான பள்ளத்தாக்கினால் நேர்ச்சரிவாக வெட்டப்பட்டு, குகைகள் பொதிந்த அடையாளங்களும், பாறைகளும் உள்ள இந்தக் குன்றுப்பகுதி, தொடக்க நூற்றாண்டுகளில் கும்ரான் போன்ற உலகத்தைத் துறந்தவர்களுக்கு அழைப்பு விடுத்த, கைவிடப்பட்ட தரிசுநிலமாக உள்ளது.[4]

வனாந்தரத்தில் யோவான் தமது ஊழியத்தைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. தேவனுடைய மக்களை மேசியா விடுவித்தல் என்பது அங்குதான் தொடங்கும் என்பது பொதுவானதொரு எதிர்பார்ப்பாக இருந்தது (காண்க 24:23-26; நடபடிகள் 21:38).[5] பிற்பாடு யோவான் வடக்கிலும் கிழக்கிலும் தொலைவில் பிரசங்கித்து, "யோர்தானுக்கு அக்கரையில் பெத்தாபரா" (யோவான் 1:28) மற்றும் "சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன்" (யோவான் 3:23) ஆகிய இடங்களில், யோர்தான் நதியில் மக்களை ஞானஸ்நானப் படுத்தினார்.

**வசனம் 2.** யோவான் பிரசங்கித்த செய்தி, தெளிவானதாக, எளியதாக மற்றும் புரிந்துகொள்ள சுலபமானதாக இருந்தது: யூதர்களை **மனந்திரும்பும்படியும்** தேவனிடத்திற்குத் திரும்பும்படியும் அவர் அழைத்தார். அவர் தமது உரையைக் கேட்ட யூதர்களை, புறஜாதிகள் செய்தது போன்றே அவர்களும் மனந்திரும்புவது அவசியம் என்று உரைத்து, அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார். "மனந்திரும்புதல்" என்பதற்கு இவ்வசனப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள (*metanoeō* என்ற) வார்த்தை, வாழ்வின் சீர்திருத்தத்திற்கு வழிநடத்தும், மனமாற்றத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. புதிய ஏற்பாட்டில் "இந்தக் குறிப்பிட்ட கிரேக்க வார்த்தை பயன்படுத்தப் படும்போதெல்லாம், மனம், நோக்கம் ஆகியவற்றில் மாற்றம், பாவத்தில் இருந்து பரிசுத்தத்திற்கு மாற்றம் ஆகியவற்றிற்கே இது குறிப்பாக உள்ளது" என்று ஜான் A. புரோடஸ் அவர்கள் கூறினார்.[6] யூதர்களை மனந்திரும்பும்படி அழைத்ததன் மூலம் யோவான், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வேண்டுகோளைப் புதுப்பித்தார் (ஏசாயா 55:7; எரேமியா 15:19; எசேக்கியேல் 33:11; ஓசியா 14:1, 2; யோவேல் 2:12, 13; சகரியா 1:3, 4; மல்கியா 3:7).

மனந்திரும்புதலுக்கான தமது அழைப்பை யோவான், அவசரத்தின் கருத்தைக் கொண்டு பின்பலம் ஊட்டினார்: **"பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது."** பல நூற்றாண்டுகளாக தேவனால் வாக்களிக்கப் பட்டிருந்த இராஜ்யம் (தானியேல் 2:44; 7:13, 14) இன்னும் வந்திருக்கவில்லை, ஆனால் அது தோன்ற வேண்டிய காலம் அருகில் நெருங்கிக் கொண்டிருந்தது. மக்கள் அதன் குடிமக்களாக விரும்பினால், அவர்கள் தங்கள் இருதயங்களை, எண்ணபோக்குகளை மற்றும் நடத்தைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அவர்களிடத்தில் யோவான் கூறினார். மனந்திரும்புதல் மற்றும் இராஜ்யம் சமீபித்து இருந்தது என்பதைப் பற்றிய செய்திகள் இயேசுவினாலும் (4:17) அவரது அப்போஸ்தலர்களினாலும் (10:7) எடுத்துச் செல்லப்பட்டன. ராபர்ட் H. குண்ட்ரீ அவர்கள், "முன்னோடியான யோவான், போதகரான இயேசு, பன்னிரு சீஷர்கள் - ஆகிய இவர்கள் யாவரும் ஒரே செய்தியைப் பிரசங்கித்தனர் என்று குறிப்பிட்டார்."[7]

*வேத வசனங்களில், "பரலோக ராஜ்யம்" என்ற குறிப்புப் பெயர் முதல் முதலாக வரும் இடமாக, மத்தேயு 3:2ம் வசனம் உள்ளது. இந்தச் சொற்றொடர், மத்தேயு சுவிசேஷத்திற்கு மாத்திரமே உரியதாக உள்ளது, இந்தப் புத்தகத்தில் இச்சொற்றொடர் முப்பத்துஇரண்டு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்ற சுவி சேஷங்களில் இதற்குப் பதிலாக, "தேவனுடைய இராஜ்யம்" என்ற சொற்றொடர் உள்ளது.[8] யூதத்துவத்திற்கே உரிய நடையில் இந்தப் புத்தகம் சிலவேளைகளில், தெய்வீகத்திற்கு நேரடிக் குறிப்பைத் தவிர்த்து, "தேவன்" என்பதற்கு "பரலோகம்" என்பதைப் பதிலிடுகிறது. இராஜ்யம் பரலோகத்தில் தொடக்கம் பெற்றது மற்றும் அது பரலோகத்தில் இருந்தே ஆளுகை செய்யப்படும். பிலாத்துவினிடத்தில் இயேசு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று கூறினார் (யோவான் 18:36). ஆண்டவர் இன்றைய நாட்களில், பரலோகத்தில் உள்ள தமது அரியணையில் இருந்து, தேவனுடைய இராஜ்யத்தின்மீது ஆளுகை செய்கிறார் (நடபடிகள் 2:32-36; 1 கொரிந்தியர் 15:24).*

*மத்தேயு 16:18, 19ல் முன்னுரைக்கப் பட்டபடி, பூமியின்மீது இராஜ்யம், சபை என்ற வகையில் தோன்றிற்று. பெந்தெகொஸ்தே நாளன்று, தேவனுடைய இராஜ்யத்தின்மீது கிறிஸ்துவின் ஆளுகையையும் ஆட்சியின் செய்தியையும் ஏற்றுக்கொண்டவர்கள், ஞானஸ்நானம் பெற்று அந்த இராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர் (நடபடிகள் 2:38, 47). அப்படிப்பட்ட தனிநபர்கள், "இருளின் அதிகாரத்தினின்று ... விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப் பட்டனர்" என்று பவுல் கூறினார் (கொலோசெயர் 1:13). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தமது கிறிஸ்தவ வாசகர்கள் "அசைவில்லாத ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்ட" (எபிரெயர் 12:28) என்று அவர்களுக்கு நினைவூட்டினார். அப்போஸ்தலரான யோவான் தமது சக விசுவாசிகளுக்கு, தாம் "இயேசுகிறிஸ்துவினிமித்தம் ... அவருடைய ராஜ்யத்திற்கும் ... உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிறவர்" (வெளிப்படுத்தின விசேஷம் 1:9) என்று கூறினார்.*

***வசனம் 3.*** *யோவான் ஸ்நானன், கிறிஸ்துவின் முன்னோடி பற்றிய* ***ஏசாயாவின்*** *தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்று மத்தேயு வெளிப்படுத்துகிறார்:*

> ***"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்கு பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள், என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம்!"***

*ஏசாயா 40:3ஐ மத்தேயு மேற்கோள் காண்பித்தல், செப்துவஜிந்த் வேதாகமத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது, இதில் "நமது தேவனுடைய பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள்" என்பது மாத்திரம், "அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள்!" என்று தழுவியமைக்கப் பட்டுள்ளது. இதன் விளைவாக, "கர்த்தர்" என்ற குறிப்புப் பெயர்சொல், மிகவும் சுலபமாக இயேசுவுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளது.*

*ஏசாயா 40:3ம் வசனம், தனது தோற்றகால சந்தர்ப்பப் பொருளில், பாபிலோனிய அடிமைத் தளையில் இருந்து எருசலேமுக்குத் திரும்பியவர்களை வழிநடத்தும் தேவனுக்கு வழியை ஆயத்தப் படுத்துவதைக்[9] - இது இஸ்ரவேல் மக்களினத்தின் விடுதலையாகவும் மீளக்கட்டுவித்தலாகவும் இருந்தது -*

குறித்திருக்கச் சாத்தியம் உள்ளது. இருப்பினும் இவ்வார்த்தைகள், தேவனுடைய மக்களுக்கு ஆவிக்குரிய விடுதலையையும் மீளக்கட்டுவித்தலையும் கொண்டு வந்த யோவான், கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்தியதில், தங்கள் மாபெரும் நிறைவேற்றத்தைக் கொண்டிருந்தன.

பாதைகளை "நேராக்குதல்" மற்றும் சமப்படுத்துதல் என்பது, பழங்கால வனாந்தர சாலைகள் மிகவும் மோசமாக இருந்தன என்ற உண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. பவுல் T. பட்லர் அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்,

> இவ்வனாந்தரப் பகுதிகள், பழங்காலங்களில் பயணம் செய்வதற்கு, கடினமான தடைகளை முன்வைத்த, முட்புதர்களும், மலைகளும், பள்ளத்தாக்குகளும், பாறைகளும், காட்டு மிருகங்களும் உடையவைகளாக இருந்தன. பயணத்திற்குச் சாத்தியமற்ற இப்படிப்பட்ட எல்லைப்பகுதியில், இராஜாக்களும் அதிகாரிகளும், பயணப்பட விரும்பியபோது, பள்ளத்தாக்குகளை நிரப்பவும், குன்றுகளை சமதளமாக்கவும், பொதுவாக தாங்கள் பயணம் செய்வதற்கு பாதுகாப்பும் சுலபமுமான பாதை ஒன்றைத் தயார் செய்யவும், தங்களுக்கு முன்னதாக அடிமைகளின் மாபெரும் குழுக்களை அனுப்புவார்கள்.[10]

மனந்திரும்புதல் மற்றும் இராஜ்யம் சமீபித்திருத்தல் ஆகியவற்றைப் பற்றிப் பிரசங்கித்ததன் மூலம், வரவிருந்த இராஜாவுக்கு மக்களின் இருதயங்களை யோவான் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார் (காண்க மாற்கு 1:2, 3; லூக்கா 3:4-6; யோவான் 1:23). லூயிஸ் அவர்கள், "இந்த வேளையில் வனாந்தரத்தில் இருந்த - கும்ரான் சமூகத்தினர் என்ற - மற்றவர்கள், 'வழியைப்' பற்றிய நிபந்தனைகளில் தங்களுக்குள் பேசிக்கொண்டு, ஏசாயா [40:3] தீர்க்கதரிசனத்திற்கு, சற்றே மாறுபட்ட வகையில் வேண்டுகோள் விடுத்தனர்" என்று குறிப்பிட்டார்.[11] அவர்களின் இயக்கம் இறந்து போயிற்று, அதே வேளையில் யோவான், கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு, என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படி, வழியை ஆயத்தம் செய்தார்.

**வசனம் 4. யோவான்**, ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் **வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்த காட்சி காண்பதற்கு எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்!** இந்த விவரிப்பு, அவர் வாழ்ந்திருந்த வனாந்தரப் பகுதிக்கும் அவர் பிரசங்கித்த எளிய செய்திக்கும் பொருந்துகிறது. யோவானின் வாழ்வு, சுயத்தை வெறுத்ததாகவும் தியாகமானதாகவும் இருந்தது. இயேசு, இவரை "அரசர்களின் அரண்மனைகளில்" வாழ்ந்திருந்த "மெல்லிய உடை தரித்திருந்தவர்களுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பேசினார்" (11:8).[12] அவரது முரடான உடையும் தோற்றமும், பழங்காலத் தீர்க்கதரிசிகளை (சகரியா 13:4) - ஒருவேளை, குறிப்பாக எலியாவை (2 இராஜாக்கள் 1:8; காண்க மல்கியா 3:1; 4:5; மத்தேயு 11:14; 17:10-13) - மக்களுக்கு நினைவூட்டியது என்பதில் சந்தேகம் இல்லை. அவரைப் பற்றிச் சரியாக என்ன நினைப்பது என்பதை யூதர்கள் அறிந்திருக்கவில்லை, ஆனால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதை அவர்கள் அறிந்திருந்தனர் (11:9; 21:26).

**வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும்** என்ற யோவானின் உணவும்கூட, அவரது வனாந்தரச் சுற்றுப் புறங்களுக்குச் சீர்பொருத்தமானதாக இருந்தது, ஆனால்

மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் வாழ்ந்தவர்களால், இது வழக்கத்திற்கு மாறானது என்று கருதப்பட்டது. யோவான் ஒரு நசரேய விரதக்காரராக இருந்தார் என்று யூகித்த குண்ரீ அவர்கள், "வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும், பாலை வனத்திற்குத் தகுதியான அரிதான உணவாக மாத்திரமல்ல, ஆனால் இரத்தத்தை நீக்க வேண்டியிருந்த இறைச்சியைத் தவிர்ப்பதாகவும் (எனவே வெட்டுக்கிளி) திராட்ச ரசத்தைத் தவிர்ப்பதாகவும் (ஆகையால் தேன்) இருந்ததால், அவைகள் விசேஷித்த வகையில் பரிசுத்தமானதாகவும் இருந்தது"[13] என்று விளக்கம் கொடுத்தார். யோவானின் உணவுப்பழக்கம் அவர் அசுத்த ஆவி பிடித்தவராக இருந்தார் என்ற பொய்க்குற்றச்சாட்டிற்கு வழிநடத்திற்று (11:18).

"காட்டுத் தேன்" என்பது, "வனாந்தரத்தில் உள்ள தேனீக்களால் தயாரிக்கப்பட்ட தேனாக, தேனீவளர்ப்பவர்களால் விற்கப்பட்ட தேனுக்கு எதிரானதாக இருந்தது."[14] இவ்வகையான தேன், வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் சாதாரணமானதாக இருந்தது (உபாகமம் 32:13; நியாயாதிபதிகள் 14:8, 9, 18; 1 சாமுவேல் 14:25, 26, 29; சங்கீதம் 81:16). வெட்டுக்கிளியை உண்ணுதல் என்ற நினைவே நமது வயிறுகளைக் கலக்குவதாக இருக்கையில், அவற்றை உண்ணும்படி இஸ்ரவேல் மக்களைத் தேவன் அனுமதித்திருந்தார் - மற்றும் ஊக்குவித்திருந்தார் என்றும் கூறலாம் (லேவியராகமம் 11:22). அவற்றை உணவாகத் தயாரித்தல் பற்றி, H. லியோ போல்ஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> அவைகள் வறுக்கப்பட்டன மற்றும் சிலவேளைகளில் அவைகள் வேகவைக்கப்பட்டன அல்லது உப்பிடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன, மற்றும் அவைகள் காணப்பட்ட பகுதிகளான கிழக்கு நாடுகள் யாவற்றிலும், ஏழை எளிய மக்களால் அவை உண்ணப்பட்டன. சிலவேளைகளில் அவைகள், சூரிய வெய்யிலில் உலர்த்தப்பட்டு, வெட்டுக்கிளிகளின் காலம் கடந்து சென்றபின்பு பயன்படுத்தப்பட்டன. அவைகள் உணவாகத் தயார் செய்யப்படுவதற்கு முன்னர், அவற்றின் தலைகளும், கால்களும் சிறகுகளும் நீக்கப்பட்டன; அவைகள் புதிதாகவும் உலரவைக்கப் பட்டதாகவும் உண்ணப்பட்டன.[15]

வெட்டுக்கிளிகள் இன்றைய நாட்களிலும் உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன, இவைகள் சில கிழக்கத்தியக் கலாச்சாரங்களில், ருசியான உணவாகக் கருதப்படுகின்றன.

## ஆயத்தப்படுத்தும் ஞானஸ்நானம் (3:5, 6)

**[5]அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய்; [6]தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.**

**வசனம் 5.** பெரும்பான்மையான தீர்க்கதரிசிகள், மக்கள் இருந்த இடங்களான, பெருநகர்கள், சிறுநகர்கள், கிராமங்கள் ஆகிய இடங்களுக்குச் செல்வார்கள், ஆனால் வனாந்தரத்தில் இருந்த யோவானிடத்தில் மக்கள் வந்தனர்.

யோர்தான் நதியில் யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார், அவரிடம் ஞானஸ்நானம் பெறுவதற்காகப் பொதுமக்கள் திரளாகக் கூடிவந்தனர். **எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய் என்று மத்தேயு எழுதினார்.** "அனைவரும்" என்பது இங்கு ஒரு உயர்வு நவிற்சி அணியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அந்த இடங்களில் இருந்த *எல்லா* மக்களும், அவர் கூறுவதைக் கேட்கச் செல்லவில்லை என்பது நிச்சயம், ஆனால் அந்த ஒவ்வொரு இடத்திலும், இருந்த மக்களில், மாபெரும் எண்ணிக்கையானவர்கள் அவ்வாறு சென்று கேட்டனர். மக்கள் மத்தியில் ஒரு கலகம் ஏற்பட்டு விடுமோ என்று ஏரோது அந்திப்பா பயப்படும் அளவுக்கு, யோவான் மிகவும் பிரபலமானவராக இருந்தார் என்று யோசிப்பஸ் அவர்கள் கூறினார்.[16]

**வசனம் 6.** யோவானின் பிரசங்கத்தைக் கேட்கச் சென்றவர்களில் பலர் அவனால் **ஞானஸ்நானம் பெற்றார்கள்.** "ஞானஸ்நானப்படுத்துதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*baptizō* என்ற) கிரேக்க வார்த்தை, "அமிழ்த்துதல், மூழ்காட்டுதல், கழுவுதல்" என்று அர்த்தப்படுகிறது.[17] மக்களுக்கு யோவான் "ஞானஸ்நானம்" கொடுத்தபோது, அவர்களை அவர் தண்ணீருக்குள் முழுக்காட்டினர் (காண்க யோவான் 3:23). கிறிஸ்தவ ஞானஸ்நானமும், தண்ணீருக்குள் முழுக்காட்டுதலாகவே உள்ளது அதில், மனம்வருந்தும் விசுவாசி கிறிஸ்துவுக்குள் "அடக்கம் பண்ணப்படுகிறார்" (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). "ஊற்றுதல்" மற்றும் "தெளித்தல்" என்பவற்றிற்குக் கிரேக்க மொழியில் வேறு வார்த்தைகள் உள்ளன. ஆனால் ஞானஸ்நானத்திற்கு அவ்வார்த்தைகள், புதிய ஏற்பாட்டில் ஒருக்காலும் பயன்படுத்தப் படவில்லை.

மதசடங்கு என்ற வகையில் தண்ணீருக்குள் முழுக்காட்டும் நிகழ்வுடன் *பல அர்த்தங்கள்* இணைந்திருந்தாலும் அது, பழங்கால உலகத்தில் பொதுவான நடைமுறையாக இருந்தது. டேவிட் S. டாக்கெரி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்,

> இதற்கான உதாரணங்களில், கங்கை நதியில் செய்யப்படும் இந்து சடங்குகள், என்க்கியின் பாபிலோனிய மதப்பிரிவின் சுத்திகரிப்புச் சடங்கு மற்றும், புதிதாய்ப்பிறந்த பிள்ளைகளைச் சுத்திகரிக்கும் எகிப்திய நடைமுறைகள் மற்றும் மரித்தோருக்காக நிகழ்த்தப்படும் அடையாளத்துவப் புத்துணர்வூட்டுதல் ஆகியவை உள்ளடக்குகின்றன. முற்கால கிரேட்டன் மதம், திரேசியின் மதம், எல்யூசினியன் மாயாவாத மதம் மற்றும் பல்வேறு நாஸ்டிக் குழுக்கள் மற்றும் மதப்பிரிவுகள் ஆகியவற்றில், சடங்காச்சாரச் செயல்முறைகளை விளக்க, *baptizō* மற்றும் தொடர்புடைய சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டன.[18]

இருப்பினும் யூதத்துவ நடைமுறைகள் (மாற்கு 7:3, 4; எபிரெயர் 6:2; 9:10), யோவான் கொடுத்த ஞானஸ்நானத்துடன் அதிகம் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. ஆசாரத்துவமாகச் சுத்திகரமாவதற்கு, சடங்காச்சாரக் கழுவுதல்கள் நியாயப்பிரமாணத்தில் விதிக்கப்பட்டிருந்தன (லேவியராகமம் 15). மிஷ்னா என்ற பிந்திய எழுத்துக்களில், இந்தத் தலைப்பிற்கு ஒரு முழுப்பகுதியே அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.[19] மேலும், முதல் நூற்றாண்டிற்கு அண்மைக் காலத்திய, யூத மதச்சடங்காச்சாரக் குளியல்கள் புதைபொருள்

ஆராய்ச்சி உதாரணங்கள், இன்றைக்கும் இஸ்ரவேல் நாட்டில் நிலவுகின்றன. சடங்காச்சாரக் கழுவுதல்கள் (*miqwa'oth*), மனந்திரும்புதலையும் புதிய யுகத்தின் உதயத்தையும் பலமாக வலியுறுத்திய கும்ரான் சமூகத்தில் விசேஷித்த வகையில் மேலோங்கி இருந்தன.[20] மற்றும் இதைப் பற்றிய நாள்வரிசைக் கணக்கு விவாதிக்கப்படுகையில், முதல் நூற்றாண்டில் புறஜாதியார், யூத மார்க்கத்து அமைந்தவர்களாக வேண்டுமென்றால், அவர்கள் - விருத்தசேதனம் செய்தல் மற்றும் பலிசெலுத்துதல் ஆகியவற்றுடன் - தங்களை முழுக்காட்டிக்கொள்ள வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்ளப் பட்டனர்.[21]

நியாயப்பிரமாணத்தின்படியான கழுவுதல்களும் யூதமார்க்கத்து அமைவதற்கான ஞானஸ்நானத்தின் பாரம்பரியமும், யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்குப் பின்னணித்திரையாகப் பயன்பட்ட அதே வேளையில், இவற்றிற்கு இடையில் பல வேறுபாடுகளும் இருந்தன. (1) யோவான் ஞானஸ்நானம் தீர்க்கதரிசியால் தரப்பட்டது, ஆனால் சடங்காச்சாரக் கழுவுதல்களும் யூதமார்க்கத்து அமையும் ஞானஸ்நானமும் தனக்குத் தானே கொடுத்துக் கொள்ள வேண்டியவைகளாக இருந்தன. (2) நியாயப்பிரமாணத்தின்படியான கழுவுதல்கள் சடங்காச்சாரச் சுத்திகரிப்பு குறித்து அதிகமாக செயல்பட்டன, இது யோவான் ஞானஸ்நானத்தில் மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்பு மீது வைக்கப்பட்ட கனத்த வலியுறுத்தத்திற்கு நேர்மாறாக இருந்தது. (3) நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்ட சடங்காச்சாரக் கழுவுதல்கள், மறுபடி மறுபடி நிகழ்த்தப்பட்டன, யோவான் கொடுத்த ஞானஸ்நானம் ஒருமுறை மாத்திரம் செய்விக்கப்பட்டது. (4) யூதமார்க்கத்து அமைவதற்கான ஞானஸ்நானம், யூதத்துவத்திற்குள் பிரவேசிக்கும் புறஜாதியாருக்கானதாக இருந்த வேளையில், யோவானின் ஞானஸ்நானம், வரவிருந்த தேவனுடைய இராஜ்யத்திற்கான ஆயத்தமாக யூதர்களுக்கு இருந்தது. யோவானின் ஞானஸ்நானம், யூதத்துவத்தில் வேர்கொண்டிருந்தாலும், தனக்கு முந்திய நடைமுறைகளில் இருந்து வேறுபட்டிருந்தது. யோவான்தாமே, தேவனே “ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்” (யோவான் 1:33) என்று சாட்சி கொடுத்தார். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பரலோகத்தினால் அங்கீகரிக்கப் பட்டிருந்தது என்று இயேசு தெளிவாகச் சுட்டிக்காண்பித்தார் (காண்க மத்தேயு 21:23-27).

யோவானிடத்தில் வந்த மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்தபின்பு, ஞானஸ்நானம் பெற்றனர், ஏனெனில் அந்தத் தீர்க்கதரிசி, மன்னிப்பை நாடும் ஒருவருக்கு, மனந்திரும்புதலை நிபந்தனையாக ஏற்படுத்தியிருந்தார் (காண்க எஸ்றா 9:6-15; சங்கீதம் 51:1-4; தானியேல் 9:4-11). J. W. மெக்கார்வீ அவர்கள், “அறிக்கையிடுதல் என்பது மிகப்பொதுவான பண்பாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் யோவானின் ஊழியத்தினுடைய குறுகிய காலகட்டமும், அவர் ஞானஸ்நானப் படுத்திய திரளான மக்கள் கூட்டமும், ஒவ்வொரு தனிநபரும் தமது பாவங்கள் எல்லாவற்றையும் விபரமாக அறிக்கையிட்டிருப்பார் என்ற யூகத்தைத் தடைசெய்கின்றன” என்று கருத்துத் தெரிவித்தார்.[22]

யோவான், மனம்வருந்திய யூதர்களுக்கு **யோர்தான் நதியில்** ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். லூயிஸ் அவர்கள், யோர்தான் நதியைப் பின்வருமாறு விவரித்தார்:

*கலிலேயாக் கடல் என்ற தொடக்க இடத்தில் இருந்து சவக்கடல் என்ற முடிவு இடம் வரையிலும், யோர்தான் நதியானது, வானவியல் அளவில் அறுபத்தி ஐந்து மைல்கள் தூரத்தை கொண்டிருந்தாலும், இது இருநூறு மைல்களுக்கும் மேலாகச் சுருண்டு இருக்கிறது. ஞானஸ்நான நோக்கத்திற்கு ஏராளமான தண்ணீரைக் கொண்டுள்ள இந்நதி, எரிகோவுக்குக் கிழக்கில், சுமார் தொண்ணூறு அடிகள் அகலமும் மூன்று முதல் பன்னிரெண்டு அடிகள் ஆழமும் கொண்டுள்ளது. ஆழமற்ற பகுதிகள் தவிர, அது ஒரு படகைக் கொண்டுமாத்திரமே கடந்து செல்லக் கூடியதாக இருக்கிறது.[23]*

## ஆயத்தப்படுத்தும் மனந்திரும்புதல் (3:7-12)

***[7]பரிசேயரிலும் சதுசேரியலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே, "வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? [8]மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; [9]ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். [10]இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாதமரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.***

***[11]"மனந்திரும்புகலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். [12]தூற்றக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்."***

***வசனம் 7.*** *யூதத்தலைவர்கள் வினோதப் பிரியத்தினால், யோவான் கூறுவதைக் கேட்கச் சென்றனர். அவர்களில்* ***பரிசேயர்களின்*** *பிரதிநிதிகளும் இருந்தனர். இந்தக் குழுவானது, மெக்காபியன் புரட்சியின், ஹசீதியன்களில் இருந்து தோன்றியது என்று பொதுவாக நினைக்கப்பட்டுள்ளது.[24] அவர்கள், அந்தக் காலகட்டத்தில் செலூசிட்ஸ்களால் யூதர்கள் மீது திணிக்கப் பட்டிருந்த கிரேக்கக் கலாச்சாரத்தின் தழுவலைப் புறக்கணித்தனர். காலப்போக்கில் பரிசேயர்கள், நியாயப்பிரமாணத்தினால் வேலியிடப்பட்ட பாரம்பரியங்களின் சிக்கலான அமைப்பை, அது முறிக்கப்படாதபடி, மேம்படுத்திக் கொண்டனர்.[25] இறையியல்ரீதியாகப் பழைமைவாதக் கொள்கைக்காரர்களாக இருத்தலில் அவர்கள், தூதர்கள், ஆவிகள் மற்றும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மீதான நம்பிக்கையைப் பராமரித்தனர் (நடபடிகள் 23:8). அவர்கள் தங்களை, யூதர்களின் மிகக் கண்டிப்பான பிரிவினர் என்றும் கருதினார் (நடபடிகள் 22:3; 26:5; பிலிப்பியர் 3:5). "பரிசேயர்கள்" என்ற பெயரே, "பிரிக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப் படுகிறது, ஏனெனில் நியாயப்பிரமாணத்தை அறியாதவர்கள் என்று அவர்கள் [பரிசேயர்கள்] கருதிய பொதுமக்களில் இருந்து, தங்களைத்*

*தாங்களே பிரித்துக்கொண்டனர் (யோவான் 7:47-49). யூதமக்களின் மீது அவர்கள் செல்வாக்குச் செலுத்திய முதன்மை இடமாக, ஜெப ஆலயம் இருந்தது (யோவான் 9:13, 22). யோசிப்பஸ் அவர்களின் கூற்றுபடி, பரிசேயர்களின் எண்ணிக்கை ஆறாயிரமாக இருந்தது.*[26]

***சதுசேயர்களில்*** *இருந்தும் உறுப்பினர்கள், யோவானைக் காணச் சென்றனர். இந்தக் குழுவில் ஆசாரியர்களும் ஆடம்பரக்காரர்களும் இருந்தனர். இவர்களின் பெயர், சாலொமோனின் காலத்தில் இருந்த பிரதான ஆசாரியர் சாதோக் என்பவரின் பெயரில் இருந்து தரவழைக்கப் பட்டிருக்கலாம் (1 இராஜாக்கள் 2:35). பரிசேயர்களைப் போன்று, இவர்களின் குழுவினரும் மக்காபேயரின் காலத்தில் எழுந்தனர். இவர்கள் தங்கள் மட்டுமீறிய ஆடம்பர வாழ்க்கை முறை மற்றும் ரோமானியர்களுடன் கொண்டிருந்த கூட்டுறவு ஆகியவற்றைக் கொண்டு அறியப்பட்டிருந்தனர். அந்தஸ்தைப் பராமரித்தல் என்பதன் மூலமாக இவர்கள், தங்கள் அதிகாரத்தையும் சலுகையையும் தக்கவைத்துக் கொண்டனர். சதுசேயர்கள், தூதர்களையோ ஆவிகளையோ, உயிர்த்தெழுதலையோ அல்லது வெகுமதி மற்றும் தண்டனைகளையோ நம்பவில்லை (22:23; நடபடிகள் 23:8).*[27] *மேலும் இவர்கள், பரிசேயர்களின் வாய்மொழிப் பாரம்பரியத்தைப் புறக்கணித்தனர்.*[28] *பல சதுசேயர்கள் ஆசாரியர்களாக இருந்ததால், எருசலேம் தேவாலயமே அவர்களின் செல்வாக்கின் வட்டாரமாக இருந்தது. பரிசேயர்களும் சதுசேயர்களும் ஆகிய இருவருமே, சனகெரீன் என்று அறியப்பட யூத ஆலோசனைச் சங்கத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர்.*

*யோவானிடத்தில் வந்த யூதத்தலைவர்கள், அவர் யாராக இருந்தார் மற்றும் அவர் செய்தவற்றை, செய்யும்படி அவருக்கு அதிகாரம் அளித்திருந்தது யார் என அறிய விரும்பினர் (யோவான் 1:19-28). அவர்களில் சிலர், அவரது* ***ஞானஸ்நானம்*** *எதிர்காலத்தில் வரவிருந்த தேவனுடைய இராஜ்யத்தின் உறுப்பினராவதை அடையாளப்படுத்திற்று என்று உணர்ந்தறிந்தனர், மற்றும் அவர்கள் அவரால் ஞானஸ்நானம் பெற விரும்பினர். அவர்களின் மாய்மாலத்தை யோவான் அறிந்திருந்தபடியால், அவர்களைக் கண்டபோது அவர் கோபம் கொண்டார். அவர்களை அவர்,* ***விரியன் பாம்புக் குட்டிகளே*** *என்று அழைத்து,* ***"வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?"*** *என்று அவர்களிடத்தில் கேட்டார். நெருப்பு நெருங்கும்போது, பாம்புகள் தங்கள் புற்றுகளில் இருந்து தப்பி ஓடுவது போன்று (காண்க நடபடிகள் 28:3), இந்த யூதத்தலைவர்கள், ஞானஸ்நானம் என்ற உடல்ரீதியான சடங்கிற்குத் தங்களை வெறுமனே ஒப்புக்கொடுத்தலால் மட்டுமே, வரவிருந்த நியாயத்தீர்ப்புக்குத் தாங்கள் தப்பித்துக் கொள்ள முடியும் என்று நினைத்தனர் என்பது உறுதி.*

*மத்தேயு 3:7 வசனம், யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் பிரசங்கித்தல்களுக்கு இடையில் இன்னொரு இணைகருத்தை அளிக்கிறது. "விரியன் பாம்புகளே" என்ற பெயர், பின்னாளில் இயேசுவை எதிர்த்து நின்ற பரிசேயர்களின் வஞ்சனை மற்றும் மோசடி ஆகியவற்றைப் பண்புப்படுத்த, இயேசுவினால் பயன்படுத்தப்பட்டது (12:34). யோவானைப் போன்றே அவர் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே, நரகாக்கினைக்கு எப்படித் தப்பிக்கொள்வீர்கள்?" (23:33).*

***வசனம் 8.*** *பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களிடம் இன்னும் அதிகமாகக்*

கேட்கப்பட்டது என்று யோவான் கூறினார். அவர்கள் **மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுத்தல் அவசியமாக இருந்தது**. அவர்களை அவர் ஞானஸ்நானப் படுத்துவதற்கு முன்பு, அவர்கள் மனந்திரும்பினதற்கு ஆதாரம் அளிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. "கனி" என்பது செயல்விளக்கப்படுத்தப்பட்ட நடக்கை என்ற வகையில் வேதவசனங்களில் காணப்படுகிறது (7:20; 12:33; 21:43). உண்மையான மனந்திரும்புதலுக்கு, வாழ்க்கையில் சீரமைப்பு முற்றிலும் அவசியமாக உள்ளது (நடபடிகள் 26:20). ஆயக்காரர்கள், போர்வீரர்கள் போன்ற, குறிப்பிட சில தனிநபர்களுக்கு யோவானின் அறிவுறுத்துதல் இந்த உண்மையை விவரிக்கிறது (லூக்கா 3:10-14).

**வசனம் 9.** யூதத்தலைவர்கள் இரட்சிப்புக்கு, தங்கள் நாடு அல்லது குடும்பத் தோற்றம் ஆகியவற்றைச் சார்ந்திருக்கலாகாது என்று யோவான் கூறினார். தேவனுடைய பார்வையில் தயவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, அவர்கள் **ஆபிரகாமின்** உடல்ரீதியான சந்ததியாக இருத்தல் மாத்திரம் எண்ணப்பட இயலாது என்ற காலம் வந்திருந்தது. உண்மையில் அவர்கள் ஒருக்காலும் இரட்சிக்கப்படக் கூடாதிருந்தது; அவர்கள் தங்கள் பரம்பரையின் காரணமாகத் தாங்கள் தேவனுக்கு ஏற்புடையவர்கள் என்று மாத்திரம் யூகித்துக் கொண்டு இருந்தனர் (யோவான் 8:31-59; ரோமர் 2:1-29; 4:1-25). மவுன்ஸ் அவர்கள், "ஆபிரகாம் தமது சந்ததிகள் எல்லாரையும் உள்ளடக்கும்படியான தகுதியின் பொக்கிஷம் ஒன்றைக் கட்டி எழுப்பும் அளவுக்கு, விதிவிலக்கான வகையில் ஒரு நல்ல மனிதராக இருந்தார் என்று ரபீக்கள் போதித்தனர்" (cf. *Mekilta Exod.* 14:15) என்று விளக்கம் கொடுத்தார்.[29] பழங்கால யூதத்துவ ஆதாரமூலம் ஒன்றின்படி, "இனிவரும் வாழ்வில் ஆபிரகாம், கெகன்னாவின் [நரகத்தின்] நுழைவாயிலில் அமர்ந்து, விருத்தசேதனம் செய்த எந்த இஸ்ரவேலரையும் அங்கு இறங்க அனுமதிக்கமாட்டார்."[30]

**"தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."** டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், "யோவானின் கூற்று, வார்த்தைகளின் மீதான விளையாட்டாகத் தோன்றுகிறது, ஏனெனில் 'பிள்ளைகள்' என்பதற்கான (*bĕnayyā'* என்ற) அரமாயிக் (மற்றும் எபிரெய மொழியில் கூட) மொழி வார்த்தை 'கற்கள்' என்பதற்கான (*'abnayyā'* என்ற) வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது" என்று உற்றுக் கவனித்துள்ளார்.[31] காட்சி உதவிப்பொருளாக யோவான் பயன்படுத்துவதற்கு, அப்படிப்பட்ட கற்கள் பல, வனாந்தரப் பகுதியில் இருந்தன (காண்க 4:3); அண்மையில் கிடந்த சில கற்களை, யோவான் சுட்டிக்காண்பித்தார் என்பதை, "இந்த" என்ற பிரதிப்பெயர்ச்சொல், கருத்தாக தெரிவிக்கிறது. யூதர்கள், "பாறையில்" இருந்து செதுக்கி எடுக்கப்பட்ட கற்களாக, அதாவது பிதாவாகிய ஆபிரகாமின் சந்ததியாக இருந்தனர் (ஏசாயா 51:1, 2). இருப்பினும், ஆபிரகாமுக்கு ஆவிக்குரிய சந்ததியை அளிப்பதற்குத் தேவன் அவர்களைச் சார்ந்திருக்கவில்லை. லியோன் மோரீஸ் அவர்கள், "மிகவும் பலவீனமான பொருளில் இருந்துகூட, எந்த வேளையிலும், சிலாக்கியம் பெற்ற மக்களை எழுப்பத் தேவன் தமக்குள்ளாகவே வல்லமை கொண்டிருக்கிறார் என்று அவர்களிடம் யோவான் கூறினார்" என்று எழுதினார்.[32] யோவானின் கூற்று, புறஜாதிகளை அவர் உள்ளடக்கியதை மறைமுகமாக உணர்த்துவதாகவும் காணப்படுகிறது (காண்க 8:11, 12; கலாத்தியர் 3:26-29).

***வசனம் 10.*** யோவான், கனியின் உருவகத்தை (3:8) கனிமரங்கள் என்ற உருவகமாகவே விரிவாக்கினார். தேவனுடைய நீதி என்ற கோடரி, **மரங்கள் வேர் அருகே வைக்கப் பட்டிருந்தது** மற்றும் கனிகொடாத ஒவ்வொரு மரமும் **வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்.** மக்களுக்கு வரவிருந்த அழிவின் வரைவளவான சித்தரிப்பாக, வனப்பகுதியை வெட்டிக் கீழே சாய்த்தல் என்ற உருவகத்தைப் பழைய ஏற்பாடு பயன்படுத்துகிறது (ஏசாயா 10:33, 34; எரேமியா 46:22). கி.பி. 70ல் ரோமானியப் படையினால், இஸ்ரவேல் மீது கொண்டுவரப்படும் தேவனுடைய நியாயத்தீர்ப்பையே யோவானின் குறிப்பு தெளிவாக்கிற்று என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இருப்பினும், தொடர்ந்து வரும் வசனங்களில் உள்ள அக்கினி மற்றும் அழிவு போன்ற மொழிநடையானது, கீழ்ப்படியாதவர்கள் கடைசி நியாயத்தீர்ப்பில் அழிவதைச் சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது. மீண்டும் ஒருமுறை யோவானால் பேசப்பட்ட வார்த்தைகள் இயேசுவின் போதனைகளில் எதிரொலித்தன (7:19; காண்க யோவான் 15:2, 6).

***வசனம் 11.*** யோவான், தாம் **தண்ணீரினால் ஞானஸ்நானம்** கொடுத்ததாகக் கூறினார். இவ்வசனத்தில், "ஆல்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*en* என்ற) முன்னிடைச் சொல், பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. ''ஞானஸ்நானப்படுத்துதல்'' என்ற வினைச்சொல், ''முழுக்காட்டுதலை'' அர்த்தப்படுத்துவதால் (காண்க 3:6ன் மீதான விளக்கவுரை), *en* என்பது "உள்ளே" என்று மிகச்சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டிருக்க முடியும்; யோவான் "தண்ணீருக்குள்" முழுக்காட்டிக் கொண்டிருந்தார்.

யோவான் மக்களுக்கு **மனந்திரும்புதலுக்காக** (*eis metanoian*) ஞானஸ்நானம் கொடுத்தார். இந்தக் குறிப்பிட்ட சொற்றொடரின் அர்த்தம் பற்றி வழக்காடப்பட்டுள்ளது. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,

> ஞானஸ்நானம் பெற்றுக்கொள்பவருக்குள் அது மனந்திரும்புதலைக் கொண்டுவருவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று விவாதிக்க இயலாது, ஏனெனில் மனந்திரும்புதல் என்பது ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்தகுதியாக இருந்தது. இதற்கு எதிர்ப்புறத்தில், இங்கு *eis* என்பதன் "வழக்கமான" (அதாவது, மக்கள் மனந்திரும்பி இருந்ததால் ஞானஸ்நானம் பெற்றனர் என்ற) பயன்பாட்டைக் கொண்டிருக்கிறோம் என்று உரிமை கோருபவர்கள், *eis* என்பது இப்படிப் பயன்படுத்தப் பட்டதற்கான இணை விஷயங்களை காண்பிக்க இயலாதிருக்கின்றன. மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரின் [''மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்," மாற்கு 1:4; லூக்கா 3:3 என்ற] சொற்றொடரில் இருந்து, மத்தேயுவின் கூற்றை நாம் விளக்கப்படுத்தினால், யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கான குறிப்பாக அல்லது அதை நோக்கிச் சுட்டிக்காண்பிப்பதாக இருந்தது எனலாம்.[33]

ஹேங்கர் அவர்கள் இந்தச் சொற்றொடர்களை " 'குறிப்புடன்,' 'இணைவுடன்' அல்லது 'கருத்து ஒருமைப்பாட்டுடன்' என்ற வகையில் மிகச்சிறப்பாகப் புரிந்துகொள்ளப்படுகிறது'' என்று கூறினார்.[34] குண்ரீ அவர்கள், " 'மனந்திரும்புதலுக்கென்று' என்பது, ஞானஸ்நானம் என்ற அடையாளத்துவச் செயல்பாட்டில், அது மக்கள் தங்கள் மனந்திரும்புதலை உண்மைநிலையாக்கக்

கூடியவர்களாகிற்று செயல்பாட்டில், அது மக்கள் தங்கள் மனந்திரும்புதலை உண்மைநிலையாக்கக் கூடியவர்களாக்கிற்று என்ற கருத்து மறைமுகமாக உணர்த்தப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.[35]

யோவான் ஞானஸ்நானம், "பாவமன்னிப்புக்கென்றும்" இருந்தது (மாற்கு 1:4). சிலுவையில் கிறிஸ்துவின் மரணம் நிறைவேறும் வரைக்கும், மன்னிப்பின் உண்மைத்தகுதி நிறைவேற்றப்படவில்லை என்றிருக்கையில் (ரோமர் 3:21-26; எபிரெயர் 9:11-28), உரைக்கப்பட்ட இந்த நோக்கத்திற்கு, யோவானின் ஞானஸ்நானம் செல்லத் தக்கதாக இருந்தது. கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னர், யோவானின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாரும், மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றனர் என்று நாம் கண்டறிவதில்லை (நடபடிகள் 1:15; 2:41), மீண்டும் ஞானஸ்நானம் பெற்றதாக வேதவாக்கியங்களில் காணப்படும் ஒரே நிகழ்வு, யோவானின் ஞானஸ்நானம் பெற்றிருந்தவர்களாக எபேசு நகரில் பவுல் கண்டறிந்த பன்னிரெண்டு மனிதர்கள், கிறிஸ்துவின் மரணத்திற்குப் *பின்னர்* ஞானஸ்நானப் படுத்தப்பட்டனர் என்பதே ஆகும் (நடபடிகள் 19:1-7). பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானம், பெந்தெகொஸ்தே நாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், யோவானின் ஞானஸ்நானம் இனியும் செல்லத்தக்கதாக இருக்கவில்லை.

யோவான், தமக்குப் பின் வரவிருந்தவர், தம்மைக் காட்டிலும் **வல்லமையுள்ளவராக** இருப்பார் என்பதை மிகத்தெளிவாகக் கூறியிருந்தார், மற்றும் கிறிஸ்துவுக்கு முன்னோடி என்ற வகையில் அவர் (யோவான்) தமது பணிப்பொறுப்பைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டார் (யோவான் 1:19-36; 3:28-30). **எனக்குப்பின் வருகிறவர்** என்ற சொற்றொடர், இயல்பில் நாள்வரிசை உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை, ஆனாலும் இது மேசியாவை - "வருகிறவர்" (11:2, 3) - பற்றிய விவரிப்பாகவும் இருந்தது.[36] **அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு** நான் பாத்திரன் அல்ல என்று யோவான் கூறினார். மோரீஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்,

> அந்தக் காலத்தில் பலஸ்தீனத்தில் இருந்த போதகர்களுக்கு ஊழியம் தரப்படவில்லை, ஆனால் சீஷர்கள் தங்களால் இயன்ற வகையில் எல்லாம் தங்கள் ரபீக்கு உதவுதல் வழக்கமாக இருந்தது. "மதியடி வாரை அவிழ்த்தல் என்பதைத் தவிர, அடிமை ஒருவன் தனது எஜமானருக்குச் செய்யும் ஒவ்வொரு வேலையையும், சீஷர் தமது போதகருக்கு நிகழ்த்துகிறார்" என்று ரபீத்துவக் கூற்று ஒன்று உள்ளது. அடிமை மாத்திரமே நிகழ்த்தும் வேலையைச் செய்யும் தாம் தகுதியற்றவர் என்று யோவான் கூறியது, அவரது தாழ்மையின் அடையாளமாக உள்ளது.[37]

யோவானுக்குப் பின் வரவிருந்தவர், பரிசுத்த ஆவியினாலும் **அக்கினியினாலும் ... ஞானஸ்நானம் கொடுப்பார்** என்று யோவான் கூறினார். இந்தத் தீர்க்கதரிசனத்தில் இருந்து நாம், கிறிஸ்து தண்ணீருக்குள் ஞானஸ்நானம் தரமட்டார் என்று முடிவெடுக்கக் கூடாது. இது யோவான் அர்த்தப்படுத்தியதாக இருக்க இயலாது, ஏனெனில் யோவான் தமது இந்த உறுதிப்பாட்டை ஏற்படுத்தியபின் குறுகியகாலத்திலேயே, கிறிஸ்து தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்படி மக்களுக்குக் கட்டளையிட்டார் (யோவான் 3:26; 4:1, 2). தண்ணீர் ஞானஸ்நானத்துடன் கூடுதலாக, இயேசு பரிசுத்த

ஆவியானவராலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்றே யோவான் அர்த்தப்படுத்தினார் என்பது தெளிவு.

இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் செல்வதற்கு முன்னர், தாம் சென்ற பின்பு, அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்தார் (யோவான் 14:16, 17, 26; 15:26, 27; 16:7-15). அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச் செல்வதற்குச் சற்று முன்னர், அவர்களிடத்தில் அவர், "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (நடபடிகள் 1:5) என்று கூறினார். அது நடைபெறும்போது அவர்கள், "பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பார்கள்" என்று அவர் கூறினார் (நடபடிகள் 1:8). இயேசு பரத்துக்கேறியதைத் தொடர்ந்து வந்த பெந்தெகொஸ்தே நாளில், இந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டது. அந்த நாளில், அப்போஸ்தலர்கள் மாத்திரம் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்றனர் (நடபடிகள் 2:4, 7, 14, 15). கொர்நேலியு வீட்டார் மீது ஆவியானவர் இறங்கி வந்த நிகழ்வுதான் (நடபடிகள் 10:24, 44; 11:15-17), அப்போஸ்தலர்களின் கைகள் வைக்கப்படாமல் (நடபடிகள் 8:14-19; 19:1-7), தாமாகவே பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்த இன்னொரு வேளையாக இருந்தது. இவ்விரண்டு நிகழ்வுகளிலும், கிறிஸ்து, யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இருசாராரான, "எல்லா மனிதர்" மீதும் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார், இது ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுதலை விளைவித்தது (நடபடிகள் 2:41; 10:47, 48). ஆவியானவரின் ஞானஸ்நானம் யோவேல் உரைத்த பின்வரும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தது:

> "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்" (யோவேல் 2:28; காண்க நடபடிகள் 2:17).

அப்போஸ்தலர்களுக்கு "அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்த" போது (நடபடிகள் 2:3), யோவான் உரைத்த அக்கினி ஸ்நானம் நிகழ்ந்தது என்று சிலர் போதிக்கின்றனர். இருப்பினும் இவைகள், பிளவுபட்டு இருந்தவையாகத் தோன்றினாலும், உண்மையிலேயே அக்கனி நாவுகளாக இருக்கவில்லை. மற்றும், அப்போஸ்தலர்கள் அக்கினியில் ("ஞானஸ்நானம்" என்பதன் அர்த்தமான) முழுக்காட்டப்படவில்லை. அடுத்த வசனத்தில் யோவான் இவ்வார்த்தைகளுக்குத் தமது சொந்த விளக்கத்தைக் கொடுத்தார்.

**வசனம் 12.** இதில் மேசியா, அறுவடை வேளையில் ஒரு விவசாயி என்பதாகச் சித்தரிக்கப் பட்டுள்ளார். அரிக்கட்டுகள் விளைநிலத்தில் இருந்து அறுத்து எடுக்கப்பட்ட பின்பு, அவைகள் **தூற்று களத்திற்கு** எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு காளைகள், வைக்கோலில் இருந்து தானியமணிகளைப் பிரிப்பதற்காக, கதிர் அடிக்கும் பார்க்கட்டையைத் தானியத்தின் மீது இழுத்துச் சென்றன. பின்பு தானியங்களைக் காற்றில் இரைப்பதற்கு, விவசாயி தூற்றுக்கூடையைப் பயன்படுத்தினார். காற்றானது, கனத்த தானிய மணிகளில் இருந்து இலேசான

பதர்களைப் பிரித்தது; கனத்த தானியமணிகள் தரையில் குவியலாக விழுந்தன, பதர்களோ காற்றினால் தூரத் தூக்கிச் செல்லப்பட்டன. விவசாயி, தமது **கோதுமையைக் களஞ்சியத்தில்** சேர்[த்தார்]ப்பார். இதற்கு நேர்மாறாக அவர், பதரைக் குவியலாகக் குவித்து அதை எரித்தார் அல்லது நெருப்புக்கு விறகாகப் பயன்படுத்த அதை ஒன்றாகச் சேர்த்தார். கிறிஸ்துவும் இதேபோன்று செய்வார்: பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார். மல்கியா 4:1ன் மேசியாத்துவத் தீர்க்கதரிசனம், “அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும்” என்று பதரை அடையாளப்படுத்துகிறது, இவர்கள் “வேரோ அல்லது கிளையோ இல்லாமல்” ஆக்கப் படுவார்கள் (3:10ஐக் காணவும்). தூற்றுகளம் என்பது பழைய ஏற்பாட்டிலும், நியாயத்தீர்ப்புக்கு அடையாளத்துவமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பது கவனிக்கத் தக்கது (சங்கீதம் 1:4; ஏசாயா 17:13; 29:5, 6; 33:11; 41:15, 16; எரேமியா 15:7; ஓசியா 13:3; செப்பனியா 2:2).

யோவான் உரைத்த அக்கினி ஸ்நானம் என்பது, அநீதியானவர்கள் எல்லாரும் அக்கினிக்கடலில் தூக்கிப்போடப்படும் வேளையான (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15; 21:8), நியாயத்தீர்ப்பை மாத்திரமே குறிப்பதாக இருக்க முடியும். மத்தேயு சுவிசேஷத்தில் அக்கினி என்பது, நியாயத்தீர்ப்பின் அடையாளம் என்ற வகையில் தொடர்ந்து பயன்படுத்தப் பட்டுள்ளது (5:22; 7:19; 13:40, 42; 18:8, 9; 25:31-33, 41, 46). இந்த அக்கினி ஸ்நானத்திற்காக நாம் ஜெபிக்கக் கூடாது, ஏனெனில் இது நாம் பெறவிரும்பாத ஒரு ஸ்நானமாக உள்ளது.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## யோவான் ஸ்நானனின் தகுதித் தொகுப்புரை (3:1-17)

பிரசங்கியார்களை ஒரு ஊழியத்திற்கு அமர்த்தலாம் என்று கருதும்போது, அவர்களிடம் தகுதித் தொகுப்புரை ஒன்றை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவது உண்டு. யூகித்தறியும் நிலையில், அந்த சகோதரர்களும், விண்ணப்பித்த நிலையில் வேலைக்கு அமர்த்தப்பட்டால், என்ன வகையான ஊழியம் செய்யும்படி எதிர்பார்க்கப் படுவார்கள் என்பது பற்றிச் சிலவிஷயங்களை அறிந்து கொள்ள முடியும். இந்த அதிகாரம், யோவான் ஸ்நானன் தம்மைப் பற்றி உரிமை கோரியிருக்கக் கூடிய பின்வரும் உண்மைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

*பெயர்:*

யோவான். இப்பொழுது நான், யோவான் ஸ்நானன் என்று அறியப்படுகிறேன் (3:1), ஏனெனில் நான், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைப் பற்றிப் பிரசங்கித்துள்ளேன் மற்றும் பலரை ஞானஸ்நானப் படுத்தியுள்ளேன்.

*பெற்றோர்கள்:*

அபியா வகுப்பைச் சேர்ந்த, ஆசாரியரான சகரியா மற்றும் ஆரோனின் குமாரத்திகளில் இருந்து வந்த எலிசபெத்து (லூக்கா 1:5).

*நான் நீண்ட காலம் வாழ்ந்துள்ள இடம்:*

*யூதேயாவின் வனாந்தரம், இங்கு நான் வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனையும் உண்டு வாழ்ந்தேன் (3:1-4).*

*முதன்மைப் பிரசங்கித்தல் பொறுப்பு:*

*கர்த்தருக்கு முன்பாகச் சென்று அவருக்கு வழியை ஆயத்தப்படுத்துதல், மக்களின் பாவமன்னிப்புக்கான இரட்சிப்பின் அறிவை அவர்களுக்குக் கொடுத்தல் (லூக்கா 1:76, 77).*

*மிக சமீபத்திய பிரசங்கக் கடமைகள்:*

*நான், வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருந்துள்ளேன் (3:3), பரலோக இராஜ்யம் சமீபித்து இருப்பதால் மக்கள் யாவரும் மனந்திரும்ப வேண்டும் என்று கூறியிருக்கிறேன்.*

*எனது பிரசங்கம் ...*

- *பாவத்தை நான் குறைத்துக் கூறுவதில்லை (3:1, 2).*
- *செய்தியை அறிவிக்காமல் என்னைத் தடை செய்யும்படி, எனது சொந்த வசதி மற்றும் வாய்ப்பை நான் அனுமதிப்பதில்லை (3:1, 3, 4).*
- *பிரபலமற்ற சில தலைப்புகளில் நான் பேசுகிறேன், இதைக் கேட்பவர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்வதில்லை (3:5-9).*
- *இயேசுவை நான் பெரியவராகக் காண்பிக்கிறேன்/உயர்த்துகிறேன் (3:11, 12).*
- *ஒருவர் இழந்து போகப்படுதல் சாத்தியமாகவே உள்ளது என்று நான் எச்சரிக்கிறேன் (3:10-12).*
- *ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று நான் போதிக்கிறேன் (3:12).*[38]

*இலக்குகள்:*

*நான் எனது இலக்குகளில் பெரும்பான்மையானவற்றை நிறைவேற்றியிருக்கிறேன் மற்றும் தனிசிறப்பான சில அனுபவங்களைக் கொண்டிருந்தேன் (3:13-17).*

*தகவல் சேர்ப்பு:*

*தற்போது நான், ஏரோது அரசரைக் கண்டனம் செய்ததற்காகச் சிறையில் இருக்கிறேன் (லூக்கா 3:19, 20). நான் ஏரோது அரசரின் அதிகாரத்தின்கீழ் இருந்தாலும், எனது கர்த்தரின் வல்லமையின் மூலம் நான் இன்னும் சுதந்தரமாகவே இருக்கிறேன்.*

## யோவான் மற்றும் இயேசு ஆகியோரிடத்தில் இருந்து பாடங்கள் (3:1-17)

யோவான் ஸ்நானன் (மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததால் அவர் இவ்வாறு அழைக்கப்படுகிறார்), யூதேயாவின் வனாந்தரத்தில் பிரசங்கிக்கத் தொடங்கி, மனந்திரும்பும்படி மக்களை அழைத்தபோது, நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தேவனுடைய அமைதியை முறித்தார். வினோதமான உடை மற்றும் பலமான செய்தி ஆகியவற்றை அவர் கொண்டிருந்தாலும், பெரிய மக்கள் கூட்டங்களைக் கவர்ந்தார். அந்த

வேளையில் இயேசு, பதினெட்டு ஆண்டுகளாகத் தாம் கொண்டிருந்த தமது சொந்த அமைதியை முறித்தார். நாம் அறிந்துள்ள வரையில், அவர் கடைசியாக, பன்னிரெண்டு வயதானபோது பேசியது கேட்கப்பட்டிருந்தது; மற்றும் இந்த வேளையில் அவர் சுமார் முப்பது வயது உடையவராக இருந்தார் (லூக்கா 2:42; 3:23). இந்த வரலாறு, நமக்குப் பின்வரும் சில பாடங்களைக் கருத்தாகத் தெரிவிக்கிறது:

1. ஆயத்தப்படுத்துதல் என்பது தேவனுடைய ஊழியத்திற்கு முன்தகுதியாக உள்ளது (3:1-3).
2. செய்தியாளரின் புறம்பான தோற்றத்தைக் கொண்டு, செய்தியின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்யக்கூடாது (3:4-6).
3. உண்மையான மனந்திரும்புதலும் அறிக்கையிடுதலும் இல்லாத ஞானஸ்நானம், தனது நோக்கத்தில் செயல்விளைவு உடையதாக இருப்பதில்லை (3:5-9).
4. தேவனுக்குக் கீழ்ப்படிதலில் இருந்து எவரொருவரும் விதிவிலக்குப் பெறுவதில்லை (3:13-15).
5. தேவனுடைய பிள்ளை என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருத்தல்தான் பரலோகத்தை நாடும் எல்லாருடைய நிறைவான தேவையாக உள்ளது (3:16, 17).[39]

## கிறிஸ்துவுக்காக யோவானின் ஆயத்தம் (3:1-12)

கிறிஸ்துவின் வருகைக்காக யோவானின் ஆயத்தம் மீதான ஒரு பாடம், பின்வரும் கருத்துக்களில் மேம்படுத்தப்பட முடியும்:

1. ஆயத்தப்படுத்தும் செய்தி (3:1-4);
2. ஆயத்தப்படுத்தும் ஞானஸ்நானம் (3:5, 6);
3. ஆயத்தப்படுத்தும் மனந்திரும்புதல் (3:7-12).

## ஒரு பிரசங்கியாரின் தாழ்மை (3:11-14)

கிறிஸ்துவின் பிரசன்னத்தில் நிற்கையில் யோவான், மன்னிப்புக்கான தமது சொந்த ஆவிக்குரிய தேவையைத் தாழ்மையுடன் உணர்ந்தறிந்தார். அவர் தாமே இயேசுவிடம் ஞானஸ்நானம் பெற வேண்டியவர் மற்றும் இயேசுவை ஞானஸ்நானப்படுத்த, தாம் தகுதியற்றவர் என்று தாராளமாக அறிவித்தார். யோவான், தமக்குப்பின் வரவிருந்த ஒருவரைப் பற்றி மக்களுக்குத் தகவல் தெரிவித்து இருந்தார் (யோவான் 1:29). தாழ்மைக்கான யோவானின் உதாரணம், இன்றைய நாட்களில் உள்ள பிரசங்கியார்களால் பின்பற்றப்பட வேண்டும்.[40]

*பிரசங்கியார்கள் தங்கள் சொந்த பாவத்தை உணர்ந்து அறிந்தவர்களாக, தேவனுக்கு முன்பாகத் தாழ்மையாக இருத்தல் அவசியமாகும்.* பிரசங்கியார்கள் “காயப்பட்ட குணமாக்குபவர்கள்” என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் தாங்களே தேவனிடம் இருந்து அனுபவித்துள்ள கிருபையை மற்றவர்களுக்கு விரிவாக்குகின்றனர். பவுல், இயேசுவின் நற்செய்தியைப் பகிர்பவராக ரோமப்பேரரசு முழுவதிலும் பயணம் செய்கையில், தாம் ஒரு “பிரதான” பாவி என்பதை (1 தீமோத்தேயு 1:15) அவர் ஒருக்காலும் மறக்கவில்லை.

*பிரசங்கியார்கள் தங்கள் செய்தியை முதலில் தங்களுக்கு நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும்.* பரிசேயர்கள் "சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" (23:3) என்பதால், அவர்களை இயேசு கடுமையாகக் கடிந்துகொண்டார். ஒரு பிரசங்கியார் ஒரு மாய்மாலக்காரர் என்ற வகையில் உணர்ந்தறியப்பட்டால், அவர் மிகவும் செயல்விளைவு உடையவராக இருக்க மாட்டார் (காண்க 7:1-5). பவுல் "மற்றவர்களுக்குப் பிரசங்கித்திருந்த" நிலையில் "தாம் ஆகாதவராய்ப் போகாதபடி," சுய கட்டுப்பாட்டைச் செயல்படுத்துதலில் உணர்வுடையவராக இருந்தார் (1 கொரிந்தியர் 9:27). அவர் தமது செய்தியை ஒரு மாதிரியுடன் பூர்த்தி செய்வதில் மிகவும் கவனமாக இருந்தார். அவர், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 11:1).

*பிரசங்கியார்கள் தங்களை அல்ல, ஆனால் இயேசுவையே மக்களுக்குச் சுட்டிக்காண்பித்தல் அவசியமாகும்.* சமயத்தொண்டின் இயல்பின் காரணமாகவே, பிரசங்கியார்கள் கவனத்தின் மையமாகுதல், மிகவும் சுலபமானதாக உள்ளது. இருப்பினும் கிறிஸ்துவே மேடையின் மையத்தைக் கொண்டிருக்க வேண்டும்; பிரசங்கியார் செய்திக்கு வாய்க்காலாக மாத்திரம் இருக்கிறார். பவுல், "நாங்கள் எங்களைப் பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 4:5).

*முடிவுரை:* பிரசங்கியார்கள், யோவான் ஸ்நானனின் எண்ணப்போக்கின் போலச் செய்யும்போது, அவர்கள் மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைச் சுட்டிக்காண்பிப்பார்கள் மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் தங்களின் ஊழியத்தில் அதிகம் செயல்விளைவு உடையவர்கள் ஆவார்கள்.

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]ஏற்பாடுகளுக்கு இடையிலான காலத்தில் ஒரு வெறுமையை யூதர்கள் உய்த்துணர்ந்து, நம்பிக்கைக்குப் பாத்திரமான தீர்க்கதரிசி ஒருவர் திரும்பி வருதலை முன்னெதிர் நோக்கினர் (1 மக்காபேயர் 4:46; 9:27; 14:41; Josephus *Against Apion* 1.8). [2]யோசிப்பஸ் அவர்கள், "(யோவானின்) வார்த்தைகளைக் கேள்விப்பட்டதால் பெரிதும் அசைக்கப்பட்ட மக்கள் கும்பல்கள்" மற்றும் "மக்கள் மீது யோவான் கொண்டிருந்த மாபெரும் செல்வாக்கு" ஆகியவற்றைப் பற்றி எழுதினார் (Josephus *Antiquities* 18.5.2). [3]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 21. [4]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 54. [5]Gerhard Kittel, "*erēmos*," in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 2:658–59. [6]John A. Broadus, *Commentary on Matthew* (Louisville: N.p.: 1886; reprint, Grand Rapids, Mich.: Kregel Publications, 1990), 34. [7]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 43. [8]"தேவனுடைய இராஜ்யம்" என்ற வார்த்தையை மத்தேயு, நான்கு முறைகள் மாத்திரமே

பயன்படுத்தினார் (12:28; 19:24; 21:31, 43). [9]Lewis, 55; Mounce, 23. [10]Paul T. Butler, *Isaiah*, vol. 3, Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1978), 10.

[11]Lewis, 56; see *Manual of Discipline* 8.13–16; 9.19. [12]Josephus *Wars* 1.24.3.48 என்ற புத்தகத்தில் காணவும். [13]Gundry, 45. [14]Leon Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 55. [15]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 71. [16]Josephus *Antiquities* 18.5.2. [17]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 164. [18]David S. Dockery, "Baptism," in *Dictionary of Jesus and the Gospels*, ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 55. [19]Mishnah *Mikwaoth*. [20]Dockery, 56–57; see *Manual of Discipline* 3.4–9; 6.14–23. கும்ரான் சமூகம் எஸ்ஸென்ஸ் என்ற குழுவைச் சார்ந்ததாக இருக்கக் சாத்தியம் உள்ளது. எஸ்ஸென்ஸ் குழுவினர், அன்றாடச் சுத்திகரிப்புச் சடங்குகளில் ஒரு பகுதியாக. "தாங்கள் உடல்களைக் குளிர்நீரில் முழுக்காட்டினர்" என்று யோசிப்பஸ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார் (Josephus *Wars* 2.8.5, 9).

[21]G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* (N.p.: W. T. Whitley Lectureship, 1962; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1994), 18–31; see Epictetus *Dissertations* 2.9.9–21; Mishnah *Pesahim* 8.8; Talmud *Yebamoth* 46a; *Pesahim* 91b–92. [22]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 34. [23]Lewis, 58. [24]1 Maccabees 2:42; 7:13; 2 Maccabees 14:6. [25]Mishnah *Aboth* 3.14. [26]Josephus *Antiquities* 17.2.4. [27]Josephus *Wars* 2.8.14. [28]Josephus *Antiquities* 18.1.4. [29]Mounce, 23. [30]*Genesis Rabbah* 48.8; see Justin Martyr *Dialogue with Trypho* 140.

[31]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 50. [32]Morris, 59. [33]Lewis, 62. [34]Hagner, 51. [35]Gundry, 48. [36]காண்க சங்கீதம் 118:26; மல்கியா 3:1; மத்தேயு 11:3; 21:9; 23:39; யோவான் 4:25. [37]Morris, 61, quoting Talmud *Ketuboth* 96a; see *Baba Bathra* 53b. [38]இந்தக் கருத்துக்களும், தகுதித்தொகுப்புரை ஒன்றை மத்தேயு 3:1-17ன் அடிப்படையில் மேம்படுத்தும் கருத்தும், ஜேக் வில்ஹெல்ம் அவர்களின், "John the Baptist's Resumé as a Preacher," *RSVP Newsletter* 153–8–83–36 (1983) என்ற புத்தகத்தில் இருந்து வந்தது. Jack Wilhelm, P.O. Box 2222, Florence, AL 35630 அவர்களின் அனுமதியுடன் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. [39]Jack Wilhelm, "The Baptism of Jesus," *RSVP Newsletter* 172-6-84-41 (1984). [40]இந்தப் பாடம் விசேஷமாக பிரசங்கியார்களுக்கு நடைமுறைப்படுவதாயிருக்கையில், பொதுவில் இது, எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் வகையில் தழுவியமைக்கப்பட முடியும்.